# மதுரை மாவட்டம்

தேதி:21/01/2026

FRM

## முதலாம் திருப்புதல் தேர்வு – 2026

12 – ஆம் வகுப்பு

வணிகவியல்

நேரம் : 3.00 மணி

மொத்த மதிப்பெண்கள் : 90

I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (20*1=20)

1. அறிவியல்பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர்
   அ) ஃபோயல் ஆ) டேலர் இ) மேயோ ஈ) ஜேக்கப்
2. குறியிலக்கு மேலாண்மை செயற் முறையின் முதல்நிலை எது?
   அ) முக்கிய முடிவு பகுதியை நிர்ணயிப்பது ஆ) நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது
   இ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது
   ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது
3. நிதிச்சந்தை வணிக நிறுவனங்களுக்கு---------- உதவுகிறது
   அ) நிதிகளை திரட்டுவதற்கு ஆ) பணியாட்களை தேர்வு செய்வதற்கு
   இ) விற்பனையை அதிகரிப்பதற்கு ஈ) நிதித்தேவையை குறைப்பதற்கு
4. மூலதன சந்தை ------- ஐ வழங்குவதில்லை அ) குறுகியகால நிதி
   ஆ) கடனுறுதி பத்திரங்கள் இ) சமநிலை நிதி ஈ) நீண்டகால நிதி
5. நம்பிக்கையுள்ள ஊக வணிகர்கள் என்பவர் அ) மான் ஆ) கரடி இ) காளை ஈ) வாத்து
6. செபியின் தலைமையகம் ________ ஆகும்.
   அ) கல்கத்தா ஆ) மும்பை இ) சென்னை ஈ) தில்லி
7. பயிற்சி பெறுபவர் மேற்பார்வையாளர் அல்லது பணியில் உள்ள மேலதிகாரி மூலம் பயிற்சியை பெறும் முறை ____ என்று அழைக்கப்படுகிறது
   அ) தொழிற்ச்சாலைக்குள் பயிற்சிமுறை ஆ) புதுப்பிக்கும் பயிற்சிமுறை
   இ) பங்கேற்று நடிக்கும் முறை ஈ) தொழிற்பயிற்சி முறை
8. சமூக சந்தைப்படுத்துதல் என்பது ________ யுடன் தொடர்புடையது
   அ) சமூகம் ஆ) சமூக வகுப்பு இ) சமூக மாற்றம் ஈ) சமூக தீமை
9. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்
   அ) 01.01.1986 ஆ) 01.04.1986 இ) 15.04.1987 ஈ) 15.04.1990
10. சரக்கு விற்பனை ஒப்பந்தத்திற்கு எது முக்கிய உறுப்பாக இருக்கிறது?
    அ) இருதரப்பினர் ஆ) சொத்துரிமை மாற்றம் இ) விலை ஈ) அனைத்தும்
11. மாற்று முறை ஆவணச்சட்டம் 1881 பிரிவு 6 எதைப் பற்றி இயம்புகிறது?
    அ) கடனுறுதிச் சீட்டு ஆ) காசோலை இ) மாற்றுச்சீட்டு ஈ) மேற்கூறிய எதுவுமில்லை
12. பின்வருவனவற்றில் கண்ணுக்கு புலனாகாத சொத்து எது?
    அ) மனிதவளம் ஆ) இயந்திரம் இ) நிலம் ஈ) வாகனங்கள்
13. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எந்தெந்த பண்புகள் தொழில் முனைவோர்க்கு உரித்தானவை?
    அ) துணிகர உணர்வு ஆ) நெளிவு சுளிவு இ) தன்னம்பிக்கை ஈ) அனைத்தும்
14. _____________ இந்தியாவை உலகளாவிய வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மையமாக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. அ) டிஜிட்டல் இந்தியா
    ஆ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம் இ) ஸ்டாட்டப் இந்தியா ஈ) வடிவமைப்பு இந்தியா
15. பொருத்தமற்ற விண்ணப்பதாரரை நீக்கும் செயல்முறை _______ அழைக்கப்படுகிறது
    அ) தேர்வு ஆ) ஆட்சேர்ப்பு இ) நேர்காணல் ஈ) தூண்டுதல்
16. ஒரு பொது நிறுமத்தில் குறைந்தது ___ இயக்குனர்கள் இருக்க வேண்டும்
    அ) ஏழு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) இரண்டு
17. நிறுமம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து _____ மாதத்திற்குள் முதல் ஆண்டு பொதுக்கூட்டத்தை கூட்டவேண்டும். அ) 12 ஆ) 15 இ) 18 ஈ) 21
18. பொருத்துக:

| | | |
|---|---|---|
| 1) மறைமுக வளங்கள் | – i) புறத்திறனீட்டல் | அ) 1–i, 2–ii, 3–iii, 4–iv |
| 2) திறன் சோதனை | – ii) நுண்ணறிவுச் சோதனை | ஆ) 1– ii, 2–iii, 3–iv, 4–i |
| 3) ஆளுமைச் சோதனை | – iii) ஆர்வச் சோதனை | இ) 1–iv, 2–iii , 3–i, 4–ii |
| 4) நேரடி வளங்கள் | – iv) வளாகதேர்வு | ஈ) 1–iii, 2–i, 3–ii, 4–iv |

19. கூற்று (A) : தனியார் மயமாக்கல் கொள்கையின் கீழ் பல பொதுத்துறை அலகுகள் (PSU) தனியாருக்கு விற்கப்பட்டன.

காரணம் (R) : தவறான நிர்வாகம் மற்றும் அரசியல் தலையீடு காரணமாக பொதுத்துறை நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்கியதே தனியார் மயமாக்கலுக்கு முக்கிய காரணம்.

அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான சரியான விளக்கம்
ஆ)A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான தவறான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு ஈ) A தவறு ஆனால் R சரி

20. பொருந்தாத ஒன்றை கண்டறிக. அ) மனப்புரட்சி ஆ) வேலைப் பகிர்வு
இ) கட்டளையொருமை ஈ) ஒருமுனைஇயக்கம்

II குறிப்பு : ஏதேனும்ஏழுகேள்விகளுக்குப்பதிலளிக்கவும்.
வினா எண். 30 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும். (7*2=14)

21. தேர்ந்தெடுத்தல் என்றால் என்ன?
22. அதிகாரம் என்பதன் பொருள் தருக.
23. குறியிலக்கு மேலாண்மையின் ஏதேனும் இரண்டு நன்மைகளைக் குறிப்பிடுக.
24. OTCI – சிறுகுறிப்பு வரைக.
25. ஊக வணிகர்களின் வகைகள் யாவை?
26. மனிதவள மேலாண்மை என்றால் என்ன?
27. ஒழுங்குமுறை சந்தை என்றால் என்ன?
28. தகவல் பெறும் உரிமை (Rig i ) பற்றி சிறுகுறிப்பு வரைக.
29. தொழில் முனைவோரின் மேலாண்மை பணிகளை பட்டியலிடுக. (ஏதேனும் 2)
30. மத்திய அரசு தனது குறுகியகால நிதித்தேவைகளை நிறைவேற்ற பொது மக்களுக்கும் மற்ற பிறநிதி நிறுவனங்களுக்கும் ___________ வெளியிடுகிறது.

III குறிப்பு : ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.
வினா எண். 40 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும். (7*3=21)

31. நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முக்கியத் தகவல்கள் எ வாறு தெரி விக்கப்படும்?
32. இரண்டாம் நிலைச் சந்தை – சிறுகுறிப்பு வரைக.
33. பணச்சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள் யாவர்? (ஏதேனும் 3)
34. செபி அமைப்பின் கட்டமைப்புகளை வரைக.
35. வேலைவாய்ப்பு இணையதளங்கள் என்றால் என்ன?
36. உலக மயமாக்கலின் ஏதேனும் மூன்று தாக்கங்களை எழுதுக.
37. மாற்றுச்சீட்டின் சிறப்பு இயல்புகளை கூறுக. (ஏதேனும் 3)
38. காலம் கடத்தும் பழமைவாத தொழில் முனைவோர் பற்றி சுருக்கமாக எழுதுக
39. பங்குகளை முனைமத்தில் வெளியிடல் என்பது குறித்து நீவிர் அறிவது யாது?.
40. பங்குரிமை ஆணை என்பது ஒரு ___________ ஆகும்.

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (7*5=35)

41. அ) ந ன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) குறியிலக்கு மேலாண்மையின் முக்கிய நன்மைகள் யாவை? (ஏதேனும் 5)
42. அ) நிதிச்சந்தையின் பல்வேறு வகையான புதிய நிறுவனங்களை விளக்குக. (ஏதேனும் 5) *(அல்லது)* ஆ) பங்குச்சந்தை பணிகளை விவரி? (ஏதேனும் 5)
43. அ) மனிதவள மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக. (ஏதேனும் 5)
*(அல்லது)* ஆ) ஆட்சேர்ப்பு முறைக்கும் தேர்ந்தெடுத்தலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் 5)
44. அ) சந்தை எ வாறு வகைப்படுத்தப்படுகிறது? விவரி. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) ந ன சந்தையிடுதலில் ஏதேனும் இரண்டு முறைகளை விளக்குக.
45. அ) நுகர்வோரின் கடமைகளை விளக்குக. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்கு. (ஏதேனும் 5)
46. அ) விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளைக் கூறி விளக்குக. *(அல்லது)*
ஆ) தொழில் முனைவோர் மற்றும் அகத்தொழில் முனைவோர் இவர்களை வேறுபடுத்துக. (ஏதேனும் 5)
47. அ) பணிசார் தொழில் முனைவோரின் தன்மையை விவரி. *(அல்லது)*
ஆ) இயக்குனரின் பல்வேறு வகைகளை சுருக்கமாக விவரி. (ஏதேனும் 5)